## அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் – சுவாமிமலை
## கும்பகோணம் – வட்டம், தஞ்சாவூர் – மாவட்டம்.
## வேலை வாய்ப்பு விண்ணப்ப படிவம்

விண்ணப்பதாரரின்
புகைப்படம்
சான்றொப்பத்துடன்

1. பதவியின் பெயர் : உதவி மின் பணியாளர்
2. பெயர்
3. தந்தை / கணவர் பெயர் :
4. நிரந்தர முகவரி :
5. பாலினம் : ஆண்/பெண்
6. மதம் :
   (சாதிச்சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்)
7. பிறந்த தேதி மற்றும் வயது :
   (பள்ளிச் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்)
8. கல்வித்தகுதி :
   (நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)
9. தொழில்நுட்பக் கல்வித்தகுதி :
   (நிர்ணயிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வித் தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)
10. திருக்கோயில்களில் பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பின் சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்
11. நன்னடத்தைச் சான்று (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து) :
12. பொதுவானவை :

மேலே கூறப்பட்ட வரிசை எண்.1 முதல் 12 வரையிலான விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், நான் இந்து சமயத்தைச் சார்ந்தவன் என்றும் இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.

நாள்:

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம்:

<u>அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் – சுவாமிமலை</u>
<u>கும்பகோணம் – வட்டம், தஞ்சாவூர் – மாவட்டம்.</u>

ந.க.எண்.1006/2018/அ1/நாள்.07.03.2018

உதவி மின் பணியாளருக்கான தகுதிகள் (Electrical Assistant)

1. உதவி மின் பணியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. தமிழ்நாடு அரசு தொழில் பயிற்சி நிறுவனம் / அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து மின் பணிகள் தொடர்பான கல்வியில் (I.T.I Electrician) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
3. Tamilnadu Electrical Licencing Board மூலம் வழங்கப்படும் " B " உரிமம் பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்படி பணியில் முன்அனுபவத்திற்கான சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

<u>பொதுவான தகுதிகள்</u>

1. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். அவரது சாதி சான்றிதழின் உண்மை நகலில் அரசு அலுவலரால் ஒப்பமிட்டு இணைக்கபட வேண்டும்.
2. விண்ணப்பதாரர் 28.02.2018 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாகவும், 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.
4. விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்களின் சான்றிட்ட நகல்கள் இணைத்து அனுப்ப வேண்டும்.
5. இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 56 மற்றும் 116(2)(xxiii)–ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதி எண்.3, 4, 12 மற்றும் 13–ல் தெரிவித்த தகுதிகள் இல்லாதவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
6. திருக்கோயிலின் ஆகம விதிகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பவராக இருத்தல் வேண்டும்.
7. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும்.
8. தொழுநோய் மற்றும் அருவருக்கத்தக்க நோய் உள்ளவர்கள் அல்லது மனநிலை பற்றிய குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.
9. எந்தவொரு நீதிமன்றத்திலும், தண்டனை பெற்றவராகவோ, நன்னடத்தைக்காகவோ, அமைதியை காப்பாற்றவோ ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவராகவோ, கடன் கொடுக்க சக்தியற்றவர் என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது. அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணி நீக்கம் செய்யப்பட்டவராகவோ, திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவராகவோ, நடத்துபவர்களாகவோ இருக்க கூடாது.
10. மேற்குறிப்பிட்ட காலி பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் தகுதியுள்ள நபர்கள் அறிவிப்பில் குறிப்பிட்ட மாதிரி படிவத்தில் கைப்பட எழுதியோ அல்லது தட்டச்சு செய்தோ சொந்த செலவில், அனுப்பி வைக்க வேண்டும்.

11. கல்வித் தகுதி மற்றும் விண்ணப்பத்திற்கான சான்றுகள் அனைத்தும் ஒளி நகல்கள் (Xerox) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிட்டு இணைத்து அனுப்ப வேண்டும். அசல் சான்றுகள் கண்டிப்பாக இணைக்கக்கூடாது.

12. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சான்று நகல்கள் இணைத்து உறையின் மேல் பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட வேண்டும்.

13. 12.04.2018 மாலை 5.00 மணிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், இவ்வறிவிப்பு நாளாகிய 07.03.2018 தேதிக்கு முன்பாக வரப்பெற்ற விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

14. மேற்படி விண்ணப்பங்கள் "துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் – மாவட்டம் – 612 302" என்ற முகவரியிட்டு நேரிலோ அல்லது பதிவு தபாலிலோ அனுப்ப வேண்டும்.

15. விண்ணப்பம் செய்வோர், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்தின்படி விண்ணப்பிக்க வேண்டும். திருக்கோயில் நிர்வாகம் தேவையென கருதும் விவரங்களை விண்ணப்பதாரர் அளிக்க கடமைப்பட்டவராவார்.

16. தகுதியுள்ள நபரை தேர்வு செய்வதில், திருக்கோயில் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.

17. தேர்வு செய்து நியமனம் செய்வது இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

18. குறிப்பிட்ட தேதிக்குள் உரிய படிவத்தில், தேவையான இணைப்புகள் மற்றும் சான்றுகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்கள் தகுதியற்றவை என நிராகரிக்கப்படும்.

19. விண்ணப்பம் செய்ததாலேயே எந்தவொரு விண்ணப்பதாரரும் தேர்வு செய்யப்பட்டதாக கருதக்கூடாது.

20. தகுதியின்மையைக் கொண்டு, விண்ணப்பங்கள் காரணம் கூறாது நிராகரிக்கப்படும்.

<u>இணைக்கப்பட வேண்டிய சான்றுகளின் சான்றிடப்பட்ட நகல்கள்</u> (Xerox copies attested by Gazetted officer)

1. வயது
2. கல்வித் தகுதி
3. ஜாதி சான்றிதழ்
4. விண்ணப்பிக்கும் பதவிக்கான சிறப்புத் தகுதிச் சான்றிதழ்
5. முன் அனுபவ சான்றிதழ் (ஏதேனும் இருப்பின்)
6. நன்னடத்தை சான்று (இறுதியாக பயின்ற கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது)
7. நன்னடத்தை சான்று (அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து 07.02.2018க்கு பிறகு பெறப்பட்டதாக இருக்க வேண்டும்)

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள், பணி நியமன ஆணை வழங்கப்பட்டதும் பணியில் சேருமுன் உடற்தகுதி சான்று அரசு மருத்துவரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட நியமனங்கள் அனைத்தும் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய கொடைகள் சட்டம் 1959 (தமிழ்நாடு சட்டம் 22/1959) பிரிவு 55 மற்றும் அதனையொட்டி வெளியிடப்பட்டுள்ள பிரிவு 116(2)(xxiii)–ல் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும்.

செ.மாரியப்பன், பி.எஸ்சி., எம்.எல்.,
உதவி ஆணையர்/செயல்அலுவலர்
துணைஆணையர்/செயல்அலுவலர் (கூ.பொ)

இரா. ஞானசேகர் எம்.ஏ., பி.எல்.,
தக்கார்/இணைஆணையர் (கூ.பொ)